தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை - 600 006

ந.க.எண். 049832/எம்/இ4/2023, நாள். 12.08.2023

பொருள் : பள்ளிக்கல்வி - மாற்றுத்திறன் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது –சார்பு.

பார்வை : 1) சென்னை–5, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண். 3222/சிப–2/2023, நாள். 31.07.2023.

2) அரசாணை (நிலை) எண். 16 மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2) த்துறை, நாள். 04.07.2023.

3) அரசாணை (நிலை) எண். 64 மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந.2–1) த்துறை, நாள். 10.07.2013.

-------

பார்வையில் காணும் கடிதம் மற்றும் அரசாணைகளின் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

மாற்றுத்திறன் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி பார்வையில் கண்டுள்ளவாறு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது அதனை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகையின் கீழுள்ள அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பிடவும், பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் மாணாக்கர்கள் அறியும் வகையில் பள்ளித் தகவல் பலகையில் இடம் பெற செய்யவும், தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர் 12/8/23

இணைப்பு : பார்வையில் காண் கடிதம்.
மற்றும் அரசாணைகள் நகல்

11/8/2023

பெறுநர் : அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

R+ 148883682

049832

M

**அனுப்புநர்**

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்,
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம்,
லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,
சென்னை – 600 005.

**பெறுநர்**

1. ஆணையர்,
பள்ளிக்கல்வித்துறை
DPI வளாகம், கல்லூரிச்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 06
2. இயக்குநர்,
உயர்கல்வித்துறை,
DPI வளாகம், நுங்கம்பாக்கம்,
சென்னை - 06

பள்ளிக்கல்வி ... சென்னை–600 006
- 8 AUG 2023

**ந.க.எண். 3222/சிப-2/2023 நாள். 31.07.2023**

பொருள் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம், சென்னை – 05 சிறப்புப்பள்ளிகள் பிரிவு - மாற்றுத்திறன் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது – இது தொடர்பாக தங்கள் துறையின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாற்றுத்திறன் மாணவர்கள் அறியும் வகையில் தகவல் பலகையில் இடம் பெற செய்தல் – தொடர்பாக.

பார்வை
1. க.மாதவன், 275, கோவில் பத்து தெரு, நன்னிலம் ஒன்றியம், திருவாரூர் மாவட்டம் அவர்களின் மின்னஞ்சல் கோரிக்கை மனு நாள்.14.07.2023.
2. அரசாணை (நிலை) எண்.16 மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2) த் துறை, நாள்.04.07.2023
3. அரசாணை (நிலை) எண்.64, மாற்றுத்திறனாளிகள் நலத்(மாதிந.2-1) த்துறை, நாள்.10.07.2013

*****

பார்வை 1ல் காணும் க.மாதவன், அவர்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களில் பலருக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலமாக வழங்கப்படும் கல்வி உதவித்தொகை குறித்து போதிய புரிதல் இல்லாமலும் அறியாமையாலும் உள்ளனர் எனவும், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை தொடர்பான அரசாணை மற்றும் உதவித்தொகை விபரங்கள் பள்ளி மற்றும் கல்லூரி தகவல் பலகையில் இடம் பெற செய்ய வேண்டும் எனவும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் உதவித்தொகை விண்ணப்பங்கள் பள்ளி மற்றும் கல்லூரிகளில் கிடைக்கும் வகையிலான வசதியினை ஏற்படுத்திட வேண்டும் எனவும், பள்ளி

மற்றும் கல்லூரிகளில் மாற்றுத்திறனாளிகளை கண்டறிந்து உதவித்தொகை எளிமையாக சென்றடையும் வகையில் ஒரு பொறுப்பாசிரியரை நியமித்திட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்.

பார்வை 2ல் காணும் அரசாணையின்படி ,மாற்றுத்திறனாளி மாணவ/ மாணவியர்களுக்கு 2013-2014 ஆம் நிதியாண்டு முதல் 1 ஆம் வகுப்பு முதல் உயர்கல்வி வரை பயிலும் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் வகுப்பிற்கு ஏற்றவாறு கல்வி உதவித்தொகை குறைந்தபட்சம் ரூ.1000/- முதல் ரூ.7000/- வரை வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் 2023-2024 ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மானியக்கோரிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "**மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகையினை இருமடங்காக உயர்த்தி வழங்கப்படும்**" என்று வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மாற்றுத்திறன் மாணாக்கர்களின் சிறப்பு கல்வியினை ஊக்குவித்திட ஏதுவாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகையினை 2023-2024 ஆம் ஆண்டு முதல் இருமடங்காக உயர்த்தி கீழ்க்கண்டவாறு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

| வ. எண் | வகுப்பு | கல்வி உதவித் தொகை | |
|---|---|---|---|
| | | ஏற்கனவே வழங்கப்படும் வருடாந்திர உதவித் தொகை (ரூபாயில்) | தற்போது இரட்டிப்பாக்கி வழங்கப்பட்டுள்ள வருடாந்திர உதவித் தொகை (ரூபாயில்) |
| 1 | 1-5 ஆம் வகுப்பு வரை | 1,000/. | 2,000/. |
| 2 | 6-8 ஆம் வகுப்பு வரை | 3,000/- | 6,000/- |
| 3 | 9-12 ஆம் வகுப்பு வரை | 4,000/- | 8,000/- |
| 4 | பட்டப்படிப்பு | 6,000/- | 12,000/- |
| 5 | தொழிற்கல்வி மற்றும் முதுகலை பட்டம் | 7,000/- | 14,000/- |

பார்வை (2)இல் காணும் அரசாணைப்படி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் வகையில் வாசிப்பாளர் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், கீழ்க்கண்டுள்ளவாறு உதவித்தொகை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

| வாசிப்பாளர் உதவித்தொகை | | |
|---|---|---|
| வ. எண் | வகுப்பு | தொகை (ரூ.) |
| 1 | 9-12 ஆம் வகுப்பு வரை | ரூ.3,000/- |
| 2 | இளங்கலை பட்டம் | ரூ.5,000/- |
| 3 | தொழிற்கல்வி மற்றும் முதுகலை பட்டம் | ரூ.6,000/- |

எனவே, மேற்கண்ட கோரிக்கையின் அடிப்படையில், சிறப்புக்கல்வி பெறும் மாற்றுத்திறனாளி மாணவர்களின் கல்வி நிலை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை மற்றும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு வாசிப்பாளர் உதவித்தொகையினை தங்கள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் மாற்றுத்திறன் மாணவர்கள் அறியும் வகையில் தகவல் பலகையில் இவ்வுதவித்தொகை குறித்த விவரங்களை குறிப்பிட வேண்டி அறிவுரை வழங்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இவ்வுதவித்தொகை விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்தும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் ஒவ்வொரு மாவட்டங்களிலும் செயல்படும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலங்களில் பெற்று தங்கள் துறையின் கீழ் செயல்படும் அனைத்து பள்ளி மற்றும் கல்லுரிகளிலும் பயிலும் மாற்றுத்திறன் மாணவர்கள் எவரும் விடுபடாமல் இவ்வுதவித்தொகையினை பெற்று உரிய பயனாளிகளுக்கு வழங்கிடும்பொருட்டு, ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்குமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு அரசாணை நகல்

ஒம்/- கமல் கிஷோர்

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

// உத்தரவுப்படி //

31/7/23

உதவி இயக்குநர் (பொ) (ப)

31/7/23

005749

<u>சுருக்கம்</u>

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – மாற்றுத்திறன் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்விஉதவித் தொகையினை (Scholarship) 2023–2024–ஆம் நிதியாண்டு முதல் இருமடங்காக உயர்த்தியும் மற்றும் இத்திட்டத்திற்கு ரூ.14,90,52,000/- நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை</u>

அரசாணை (நிலை) எண். 16 நாள்: 04.07.2023,

சோபகிருது, ஆனி – 19,

திருவள்ளுவர் ஆண்டு, 2054.

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.65, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2.1)த் துறை, நாள் 12.07.2013.
2. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2.1)த் துறை, நாள் 04.05.2018.
3. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க. எண்.3222/சிப.2/2023, நாள் 20.04.2023.

STATE COMMISSIONERATE FOR THE DIFFERENTLY ABLED
07 JUL 2023
KAMARAJ SALAI, CHENNAI-600 005.
LADY WILLINGDON COLLEGE CAMPUS

******

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகையினை இரு மடங்காக உயர்த்தியும் மற்றும் 2013–2014–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.6.50 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2018–2019–ஆம் நிதியாண்டு முதல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் சுமார் 52 நலத் திட்டங்கள் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்குள் செயல்படுத்திட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அதிகாரப்பகிர்வு (Delegation of Power) வழங்கி ஆணை வெளியிடப்பட்டது. இவ்வாணையின் பத்தி 2(i)(4)–ல் மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை (Scholarship) வழங்கும் திட்டமும் இடம் பெற்றுள்ளது.

3. 2023–2024–ஆம் நிதியாண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> "மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இரு மடங்காக உயர்த்தி, 22,300 மாணவர்கள் பயன் பெறும் வகையில் ரூ.700.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்".

4. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், மாற்றுத்திறனாளி மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகையாக அவர்கள் பயிலும் வகுப்பு / படிப்பிற்கு ஏற்றவாறு குறைந்தபட்சம் ரூ.1,000/- முதல் ரூ.7,000/- வரை கடந்த 2013-2014-ஆம் நிதி ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது என்றும் மேற்படி புதிய அறிவிப்பினை தொடர்ந்து, மாற்றுத்திறன் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை அவரவர் பயிலும் வகுப்புகளுக்கு ஏற்றவாறு இரண்டு மடங்காக உயர்த்தியும் இத்திட்டத்திற்கு ரூ.14,90,52,000/- நிதி ஒதுக்கீடு வழங்குமாறும் அரசினைக் கோரியுள்ளார்.

5. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்று, மாற்றுத்திறன் மாணாக்கர்களின் சிறப்பு கல்வியினை ஊக்குவித்திட ஏதுவாக மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை (Scholarship) 2023-2024-ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தியும் இத்திட்டத்திற்கு ரூ.14,90,52,000/- (ரூபாய் பதினான்கு கோடியே தொண்ணூறு இலட்சத்து ஐம்பத்தெரண்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுகிறது. மேலும், இச்செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு முதல் கணக்கிட்டு வழங்க மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது:-

| வ. எண் | வகுப்பு | கல்வி உதவித் தொகை | |
|---|---|---|---|
| | | ஏற்கனவே வழங்கப்படும் வருடாந்திர உதவித் தொகை (ரூபாயில்) | தற்போது இரட்டிப்பாக்கி வழங்கவுள்ள வருடாந்திர உதவித் தொகை (ரூபாயில்) |
| 1. | 1-5-ஆம் வகுப்பு வரை | 1,000/- | 2,000/- |
| 2. | 6- 8-ஆம் வகுப்புவரை | 3,000/- | 6,000/- |
| 3. | 9-12 ஆம் வகுப்பு வரை | 4,000/- | 8,000/- |
| 4. | பட்டப்படிப்பு | 6,000/- | 12,000/- |
| 5. | தொழிற்கல்வி மற்றும் முதுகலை பட்டம் | 7,000/- | 14,000/- |

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 மாற்றுத்திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – BB மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் – 312 படிப்பு உதவி தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை"

(IFHRMS DPC: 2235-02-101-BB-31209)"

7. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தில் ரூ.7,95,02,000/- 2023-2024-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிலிருந்து மேற்கொள்ள வேண்டும். மீதமுள்ள தொகை ரூ.6,95,50,000/- கூடுதல் நிதியொதுக்கம் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

8. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் செலவினம் ரூ.6,95,50,000/- ஒரு "புதுத்துணைப்பணி" (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ.I)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வ.செ.பொ.I)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொ.I/ச.ந.)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.24918/நிதி(சந)/2023, நாள் 03.07.2023 மற்றும் கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.423 (நானூற்று இருபத்தி மூன்று) (IFHRMS ASL No.2023070423)-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. ஆனந்தகுமார்
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதி (ச.ந/வ.செ.பொது-I&II/வ.வ-I)த் துறை, சென்னை-9.
செயலாளரின் தனிச் செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

மா. கற்பகக்கண்
06/07/2023
அரசு சார்புச் செயலாளர்

06-07-2023

Readers' Allowance Enhancement

## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2013–2014 ஆம் ஆண்டு முதல் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் வாசிப்பாளர் உதவித் தொகையினை இரு மடங்காக உயர்த்துதல் மற்றும் ரூ.80.46 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.64

நாள்:10–07–2013
விஜய, ஆனி 26,
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.31, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 25–03–2013.
2. அரசாணை(நிலை) எண்.40, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 19–04–2013.
3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 09.5.2013.
4. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் எண்.2383/சிபதி/2013, நாள் 20.5.2013.

---

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு 2012–2013 ஆம் நிதியாண்டிற்கு திட்டத் தொடராணையும் ரூ.19.00 இலட்சம் நிதி ஒப்பளிப்புச் செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 2012–2013 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 913 பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ/மாணவிகளுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு ரூ.21.23,000/– கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9.5.2013 அன்று ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:–

பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ–மாணவியரின் கல்வி அறிவை மேம்படுத்தும் வகையில், 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும்மாணவ–மாணவியருக்கு 1500 ரூபாயும், இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ–மாணவியருக்கு 2500 ரூபாயும், பட்ட மேற்படிப்பு மற்றும்

தொழிற்கல்வி பயிலும் மாணவ–மாணவியருக்கு 3000 ரூபாயும் என வாசிப்பாளர் உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு முதல் இந்த வாசிப்பாளர் உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 1500 பார்வையற்ற மாணவ – மாணவியர் பயன்பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு 19 லட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதத்தில் 2013–2014 ஆம் ஆண்டிற்கு பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியர்களுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் இரு மடங்காக உயர்த்தியும் ரூ.80.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. முதன்மைச் செயலாளர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்த அரசு அதனை ஏற்று, பின்வருமாறு ஆணையிடுகிறது.

2013–2014 ஆம் ஆண்டில் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ/மாணவிகளுக்கு தற்போது வழங்கப்படும் வாசிப்பாளர் உதவித் தொகையை பின்வருமாறு இரு மடங்காக உயர்த்தவும், இத்திட்டத்திற்கு தேவையான ரூ.80.46 இலட்சம் (ரூபாய் எண்பது இலட்சத்து நாற்பத்து ஆறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்புச் செய்தும் இச்செலவினத்தை மேற்கொள்ள முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் ஆணையிடுகிறது.

| வ.எண். | வகுப்பு | தற்போது வழங்கப்பட்டு வரும் தொகை | இரு மடங்காக உயர்த்தி வழங்க கோரப்படும் தொகை. |
|---|---|---|---|
| 1. | 9–12 ஆம் வகுப்பு வரை | ரூ.1,500/. | ரூ.3,000/– |
| 2. | இளங்கலை பட்டம் | ரூ.2,500/– | ரூ.5,000/– |
| 3. | தொழிற்கல்வி மற்றும் முதுகலை பட்டம் | ரூ.3,000/. | ரூ.6,000/– |

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிப்புச் செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235–சமூக பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்–I– திட்டத்தில் சேராதது–BB மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகைகள்–12 படிப்புதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும்–09 ஏனையவை"
(க.தொ.கு 2235–02–101–BB–1290)

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.80.46 இலட்சத் தொகை 2013–14 ஆம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2013–14 ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். 2013–14 ஆம் ஆண்டின்

திருத்திய / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் நிதியொதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2013–14–ம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவையும் மற்றும் துணை மானியக் கோரிக்கை 2013–14ல் சேர்ப்பதற்கான உரிய செயற்குறிப்புகளை தவறாமல் நிதித் துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு முதன்மைச் செயலாளர்/மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.35644/நிதி(சந)/13, நாள் 9.7.13–ன்படி ஒத்திசைவுடன் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.626 (அறு நூற்று இருப்பதாறு)ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கானமாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)
நகல்:–
நிதி( (சந),(வ.செ. பொது–II))த் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இ.கோ/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

23/7/13
பிரிவு செயலாளர்
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை
தலைமை செயலகம், சென்னை-9.